Gr. 26020
1971

தமிழ்
3927

# ஸ்ரீ ஸத்குரு ஸ்துதி.



கிரிஸூதை இயற்றியது.

3927

# ஸ்ரீ ஸத்குரு ஸ்துதி

## ஸத்குருவரவேற்பு.

ஈ - இங்கிலீஷ் நோட்

வருக வருக வருக வருக யெங்கள் நாதனே
தருக தருக தருக தருக தருக கமலபாதமே.
மங்களங்கள் பொங்கியளிக்கும் மங்களகா மூர்த்தியே
மங்களமாம் வாசபிதனில் மலரடியை வைத்திங்கு
பெருக பெருக பெருக பெருகபெருக அத்வைதமுமே
கருக கருக கருக கருக கருக கன்மவினைகளும்
நிறைக நிறைக நிறைக நிறைக நிறைக நின்னருள்
வெள்ளம்
உறைக உறைக உறைக உறைக உயிர்த்திரள்களைத்
திற்கும்
மறைக மறைக மறைக மறைக துர்மதமாம் பேய்களும்
கரைக கரைக கரைக கரைக கன்மனதின் கஷ்டமும்
பெரிய பெரிய பெரிய பெரிய பெரிய உந்தனருளினால்
அறிய அறிய அறிய அறிய அறிய யெங்குமானந்தம்.

---

ஈ - இங்கிலீஷ் நோட்

பல்லவி

ஹா இதென்ன கும்பலோ இதே ஜனப்பந்தலோ

சரணங்கள்

காந்தத்தைக்கண்ட இரும்பெனல்போல
சாந்தமாம் சத்குருவின் சரணத்தைக்கண்டு வந்த

2. எள்ளிடம் கொள்ளாது எங்குமே நிறைந்துநின்று
சொல்லிற் கடங் காத சுகவொளி காணவந்த

3. கோடி பல் கோடியாகும் பிறவியின் பயம் நீக்க
நாடிய குரு பாதம் நலமுடன் காணவந்த

4. போத ஆகாயமதின் பூர்ணமாம் மதியிதனை
வேதகோஷத்துடனே விரும்பியே காணவந்த

5. கைவல்யக்கடலதில் கடைந்திட்ட அமிர்தத்தை
மெய்க்கொரு துணையாக மேவியே தாவி வந்த

---

ரா - கானடா

பல்லவி

பிரம்மஸ்வரூபத்தைப்பாரு செய்த கர்மவினைகளை தீரு
தர்மநெறிகண்டு ஏறு அந்த தாமரைப்பாதமே சேரு

சரணங்கள்

1. அண்டர்களும் நின்று ஏற்ற அண்டப்பல்லக்கதில் வீற்று
மண்டலமெங்குமே போற்ற மாளாத பவக்கடல் மாற்ற

2. மறலியின் பயமது நீங்க அந்த மலர் மகன் கையும் ஏங்க
இம்மகானின் பாதமே பார்க்க மாயமாம் வினைகள் தீர்க்க

3. அக்ஞான அவஸ்தைகள் நீக்க அங்கு உதித்திடும் அழகுள்ள வாக்கு
பிரக்ஞான ஒளி உள்ளில் ஆக்க பேதம் கடந்திட்ட நோக்கு

---

**ரா - இந்துஸ்தான்**

நாதனின் வரவுகண்ட நாளிதே நல்ல நாள்
ஆதரவாகிடும் அருளுருவேயான

சரணங்கள்.

1. ஸ்ரீயினருள் பெருக ஸ்ரீரங்கம் உய்திட
ஸ்ரீகுருவருகையால் ஜன்மம்சுகிர்தமாக (நாதனின்)
2. இன்பமே யெங்கும் பொங்க ஏக்கமே நீங்கிட
கன்மவினை விலக கருணைபுரிந்து காக்கும் (நாதனின்)
3. இருளையே நீக்கியெங்கும் ஏகவஸ்துவறிய
மருளையே நீக்கியெங்கும் மனதினிலுறைந்துகாட்டும்
4. தாபத்ரயங்கள் தணிய தானதுவாகிட
ஆபத்பந்துவேயாகி அருளினால் காக்கவந்த (நாதனின்)
5. பிறவியும் ஈடேறிட பேரின்பமடைந்திட
மறலியும் ஓடிட மலரடி தந்துகாக்கும் (நாதனின்)

---

அக்ஷரமாலை.

1. அத்வைத வஸ்துவே அருந்தேனே
ஆதிகுருவே அதிசுகமே
2. இன்பவாரிதியே எழில் மதியே
ஈடேற்றும் கதியே பசுபதியே
3. உருவருவாகி உயர்வோனே
ஊனுணர்வாயெங்கும் ஒளிர்வோனே
4. எங்கிலு நிறைந்திடும் மென்குருவே
ஏகமாம்சுக கல்பகதருவே
5. ஐயம் நீக்கிடும் அருமருந்தே
ஐந்து அக்ஷர அருள்விருந்தே

6. ஒரு மொழியால் பதம் தருவோனே
ஓங்காரமாகி உயர்வோனே

7. ஔவியம் நீக்கிடும் அருட்குருவே
ஆதாரநிலையே அருளுருவே

8. கலைமிகுஞான வாரிதியே
கற்றவர் மனநிற்கும் நல்நிதியே

9. நப்போல் வளர்ந்திடும் நல்உறவே
நாயேனையாண்டிடும் நல்குருவே

10. சத்குருவான சமரசபதமே
அத்புதானந்த அத்வைதரஸமே

11. ஐயம்பட உரைத்திடும் நல்குணமே
இதம்பல சொல்லிடும் நல்வினமே

12. டம்பம் விலக்கிடும் அம்பலனே
உம்பர்கள் போற்றிடும் சிவசங்கரனே

13. மணமிகுமலரே மௌனபதமே
குணமிகுகுன்றே குளிர்தேனே

14. தன்மயமாக்கிடும் பொன்மணியே
முன்வினை நீக்கிடும் என் கண்மணியே

15. நல்லோர் மனநிற்கும் நவரஸமே
நல்வழி யுரைத்திடும் கனிரஸமே

16. பரமகுருவாம் பரசிவவொளியே
பக்திபதமே முக்திநிலையே.

17. மறைமுடியொளியே மாணிக்கமே
மாதவன் தேடிடும் ஆதவனே

18. யதிராஜராஜ சேகரனே
அதிகுணவீர்ய காம்பீர்யனே

19. ரக்ஷிக்கவந்த சத்குருவே
ராகத்வேஷம் நீக்கிடும் தருவே

20. லக்ஷ்மி வாணி பூஜிதனே
லகுபக்தியால் பதம் தருவோனே.

21. வம்பர்கள் வாய்மதம் தீர்ப்போனே
வானோர் வணங்கிட நின்றோனே.

22. பழமறை போற்றிடும் பரசிவரூபா
பல்வினைநீக்கிடும் பார்வதிபாகா

23. தளர்ந்திடுமென்தனை பாராயோ
நின்தாளினை எனக்கு தாராயோ.

24. அறம் வளர்ந்திட வந்தோனே
ஆதியாம் குருவாய் நின்றோனே.

25. மனமடங்கும் மணிமந்திரமே
குணமது தந்திடும் யந்திரமே

26. ஷண்மதஸ்தாபனம் செய்தோனே
ஸ்ரீ சங்கரகுருவாய் வந்தோனே.

27. ஸாதுக்களைக் காக்க வந்தோனே
வாதத்தால் பூபாரம் தீர்த்தோனே.

28. க்ஷணந்தனில் பவபயம் தீர்ப்போனே
க்ஷமித்திடுமென் குற்றம் ஆள்வோனே.

29. ஹம்ஸபதார்த்த அருநிலையே
ஆதியனாதியாம்—அருள்மலையே.

30. என்னுயிர் நிலையே இனிதேனே
என்னென்றுரைப்பேன் இறைவோனே.

31. ஞானகுருவே நல்மணமே
மௌனபதமே மறைமுடியே

32. மந்திர குருவே சுந்திரனே
மனப்பரியடக்கிடும் தந்திரனே

33. அருமறை போற்றிடும் ஆனந்த ரூபா
அடியேனையாண்டிட நீ வாவா

34. சிவ சிவ சிவ சிவ குரு நாதா
சிறி யேனையாண்டிட நீ வாவா

35. சங்கா சங்கர சங்கா குருவே
சீர்க்கேதன் சரணமே மற்றேதுகதியே

36. உற்றதுணையே சுற்றமாம் உறவே
பற்றது வேறுண்டோ பகர்வாயே

---

## ஸத்குருமஹிமை கும்மி.

சங்கர சிவ சங்கர சிவ சங்கா குருவே
எங்கிலும் போற்றி வணங்கும் அருளுருவே

1. சங்கரரின் சரணபத்மம் சதா காலம் வணங்கினேன்
எங்கும் பொங்கும் அவாருளும் எனக்கு துணையாகவே

2. வாதத்தாலே பூமிதனின் வாதனைகள் நீக்கியே
போதரூபமாகி யெங்கும் பூர்ண வஸ்து வானோனே

3. அத்வைத ஆனந்தத்தை அழியாதுமேஸ்தாபித்து
மித்யா ஜெகத்திலெங்கும் மேன்மை வழிகாட்டிய

4. மனவாக்குக்கெட்டாத மகிமைகளும் செய்திட்டு
இனமாக ஈடேற துணையாக வந்த நல்

5. மாதவமே செய்த மாதா மகிழப்பதமளித்திட்டு
மாத்ரு பக்திமகிமை யதுவும் மண்டலத்தில் காட்டிய

6. மறைமொழியைக்கூறியும் மனது வசங்காமந்தமாம்
முறையறியா மூடருக்கு அருஞ்சாபமுமே யளித்திட்ட

7. அருளாலே சாபநீக்க அவதரிப்பேனென்றோனே
இருளான சாப நீங்க அவதரித்து வந்தோனே

8. முப்பத்து மூன்றும் முறையதினில் மூலகுரு உருவமாய்
செப்ப முடியாச்சிவமாகி சீர்பெருக வந்ததே

9. சங்காரின் உருவமாக ஜகந்தனிலவதரித்து
சாந்தமான பார்வையாலே அடியார்க்கருள் சுரந்திட்ட

10. மனவாக்குக்கெட்டாத மறைமுடியின் மகிமையை
மந்த புத்தியுள்ள என்னால் எடுத்துக்கூறலாகுமோ

11. நின் சரணம் என்மனதில் நின்று துணையாகவும்
நின்னருளை மனதிலெண்ணி சிறிதுரைக்கலானேனே

12. சகுணப்பிரம்ம நாமமான தம்பதிகள் களிக்கவே
நிர்குணத்தின் ஜோதி தோன்றி இவ்வுலகு ஜொலிக்கவே

13. சங்காரின் அவதாரத்தை ஸ்தாபித்திடவெண்ணியே
எங்கும்போற்றும் ஆசிரமத்தைஎட்டு வயதில் கிரஹித்
திட்ட

14. வாக்கிய முறைத்த குருவும் வாழ்த்தியே பிரமித்திட
வாக்கிய அனுபவத்தை அத்தினமே காட்டிய

15. பசுபதியே யதிபதியாய் அதிவுயர்வாம் ஆசனத்தில்
ஜகத்குருவாய் சிறப்புற்றோங்கி யாண்டிடவே வந்தசுல்

16. உந்தன் மகிமையுரைக்கவென்றால் உள்ளமும் நடுங்குதே
உந்தனருளை தந்தெனக்கு உறுதிசெய்வாயே

17. பவவினைகள் பார்வையாலே பறந்தோடவில்லையா
அவலமான பெந்தனுக்கருள் செய்வதுமேதொல்லையா

18. ஊமைக்குமே ஒரு நொடியில் வாக்குதவவில்லையா
பாமரனாகாத என்னைப்பார்க்கமனம் வாவில்லையா

19. கருணையாலே அந்தகனுக்கும் கண்ணளிக்கவில்லையா
சரணமடைந்த பெந்தனுக்கு தருணமிதுவுமில்லையா

20. காக்கை வலிப்புக்கர்மமதுவும் கணத்தில் நீங்கவில்லையா
ஆக்கைக்குறுதுணையே யெனையாள்வதுமே தொல்லையா

21. அலியைப்பெண்ணாக்கியதோர் அருளுருவமல்லவோ
வலிமையற்ற பெந்தனைப்பார்க்க மனம் வல்லையா

22. ஆஹ்னிக சமயமதில் அல்பஜெந்து பல்லியும்
ஆருயிரை நீக்கிடவே அவ்வுயிரளித்திட்ட

23. தர்மமூர்த்தியாகவே ஜெகமெங்கும் நிறையவில்லையா
கர்மவினை நீக்கி யெனை காக்க மனம் வல்லையா

24. அருஞ்சாபம் தீர்த்திடவே அரியயாத்ரை புறப்பட்டு
அன்பாகம் களித்திடவே துன்பமெங்கும் தொலைத்த
நல்

25. கருணையாலே ஜீவர்களின் கர்ம பந்தம் நீக்கியே
சரணம் பட்ட ஸ்தலங்களெல்லாம் புனித மடைய
செய்திட்ட

26. அருளாலே அகில வுயிர்க்கும் ஆனந்தமே யளித்திட்டு
அருளான் மலரடியால் அவனி யிருள் நீக்கிய

27. அலைகடலில் நடு இரவில் அலறி வந்த பக்தனுக்கு
அருந்துணையா யெதிரமர்ந்து அழைத்தேகவில்லையா

28. காடு மூடிய காலடியும் கைலையாகவில்லையா
நின் காலடியும் பட்டவுடன் கடுஞ்சாபம் விலகவில்லையா

29. அண்டர்களும் அடிபணிந்து தொண்டுபுரியவில்லையா
எண்டிசையும் வந்து நிறைந்து இன்பமடையவில்லையா

30. பார்வைக்கஞ்சி பாம்பு புலிகள் பதுங்கியோடவில்லையா
பார்வைக்கஞ்சி பாபகர்மம் பயந்தொளியவில்லையா

31. அழகான ஆசிரமங்கள் அங்கு விளங்கவில்லையா
புகழான தருமங்களும் பொழிந்து வழங்கவில்லையா

32. சர்வலோக ஈசனென்றே சகலதேசமன்னரும்
சந்தோஷமாய் வந்து கூடி சரணமடையவில்லையா

33. வந்த வருணன் ஆக்ஞைக்கஞ்சி வழி திரும்பவில்லையா
வந்திடவே யுரைத்தபோது வந்து பொழியவில்லையா

34. அழகு மிகு இருகோயில்கள் அற்புதமாய் நிர்மித்து
புகழான மூர்த்திகளை பூர்ண கலையாய் ஸ்தாபித்த

35. ஆதி குரு மூர்த்தியையொருகோயில்தனில்ஸ்தாபித்து
அன்னையான அம்பாளையும் அழகாக நிலைசெய்த

36. சாபம் நீக்கிய சாந்த மூர்த்தியை சகல ஜீவராசியும்
தாபம் நீக்க கருணைமிகே யென்று பணியவில்லையா

37. ஒரு குறையுமின்றியே உயிர்த்திரள்களைத்திற்கும்
கருணை நிதியாய் காத்துமிகு களிப்பளிக்கவில்லையா

38. ஆத்மகோடிகளீடேறவே அரிய சூத்ர பாஷ்யத்தை
அளவற்ற கருணையாலே ஆனந்தமாயுரைத்திட்ட

39. சங்கரின் நூல்களெல்லாம் ஜகமெங்கும் விளங்கிடவே
சத்குருவாம் உன்னருளும் முன்னின்று வழிகாட்டவே

40. பக்தனொருவனுக்குமந்த ஆக்ஞை யதுவும் கூறவே
முக்திப்பொருளே யுன்னருளை முன்னிட்டவனும்
முடிக்கவே

41. வந்த கார்ய முடிந்தவுடன் சொந்தமான சிருங்ககிரியை
எந்தையுமனதிலெண்ணி விந்தையாகச்சென்றிட

42. பக்தர்களின் தவக்குறைவே பாப கலியின் கொடு
மையோ
எத்திக்கும் ஏங்கிதவிக்க வெந்தன் ஈசன் மறையவே

43. அகண்டிதாகாரமாகி அகிலமெங்கும் நிறையவே
அகண்டமான பொருளதுவும் அருவமாகியமாவே

44. எங்கும் நிறையும் பிரம்மமென்றே இவ்வுலகுகண்டிட
தங்கி வாடும் பக்தர்களுக்கு தானெதிராய் விளங்கிடும்

45. நினைக்குமன்பர் வருத்தம் தீர நிமிஷமெதிர்ப்பட்டுமே
அனைத்துமவரை பரிவுடனே அருளுமிக தந்திடும்.

46. என் குருவின் மகிமையுரைக்க ஏழையென்னாலாகுமோ
எந்தனுள்ள ஆவலாலே ஏதோ சிறிதுரைத்தேனே

47. அருவமான குருவுருவும் உருவமாகி வந்ததோ
குருவாகி குவலயத்தின குறைகள் தீர அமர்ந்ததோ

48. பாக்கியமற்ற ஜனங்கள் பரிதாபத்தையும் நீக்கவே
வாக்கிய முரைத்து நல்ல வழியும் காட்ட வந்ததோ

49. எந்தனை யாட்கொண்டிடவே ஈசனுருவாய் வந்ததோ
மூந்திய வினைகள் தீர்க்க முன்னுருவாயமர்ந்ததோ

50. வியாக்யான சிம்மாசனத்தின் விபவம் விளங்கிடவே
சத்குருவாய் ஜெகத்பதியாய் சார்ந்து அங்கு அமரவே

51. கவலை நீங்க களிப்புமோங்க கருணையுருவாய் வந்ததோ
அவலமான வெந்தனையும் ஆண்டிடவே வந்ததோ

52. துன்பம் நீங்க இன்பமோங்கதொடர்ந்து முறையாய்
வந்ததோ
அன்புபெருக்கி யல்லல் நீக்கியாண்டிடவேயமர்ந்ததோ

53. சத்குருவின் சரணபத்மம் ஜகத்திலெங்கும் வாழ்கவே
சார்ந்திடும் அடியவரும் ஓங்கிமிக வாழ்கவே

54. அத்வைத கொடியதுவும் அஷ்ட திக்கும் வாழ்கவே
அன்புபெருக்கும் அருளதுவும் அகிலமெங்கும் காக்க
வே

## ஸத்குரு பார்வை மஹிமை.

எந்தன் குருநாதன் கண்மகிமை
ஏதென்று தானதை ஓதிடுவது

1. மந்தஹாசப்பார்வைதனில் மகிழ பல்வித முதித்து நிற்கும்
எந்தவுலகும் தஞ்சமென அடிபணிந்திட அருளைவீசும்

2. வினைப்பிறவிக்கஞ்சேலென்று வீரமோர்பாற் பொலிந்துநிற்கும்
அனைத்துலகும் ஆண்டளிக்கும் அழகு மன்னன் அருளும் தோன்றும்

3. அடியவர் மனதுயரமகல ஆதாரவாம் கருணையோர் புறம்
கொடியமாயை நொடியில் விலக அடித்து வீசும் ஜோதியோர்புறம்

4. பாபிகட்கு பாயும்வாளென பயமடைந்தோடதோன்றி நிற்கும்
தாபவினைகள் தணிந்துபோமென்று தன்னருளதில் தோன்றிடுமே

5. ஏழை பங்காளனென்றிய இரக்கமுமங்கே கனிந்து தோன்றும்
வாழுமுயிர்கள் வழியென்றறிய வசியமுமங்கேதோன்றிடுமே

6. ஆபத் பந்து என்று அந்த அரிய அருளும் ததும்பி நிற்கும்
கோப நீக்கிய கோமள நேத்ரம் குணக்கடலென்று பார்த்து நிற்கும்

7. அரிய பார்வைக்கஞ்சியே மிகு அண்டர்களும் தொண்டுசெய்வர்

பிரியபார்வையிலீடுபட்டு உயிர் திரள்கள் சரணமடை
யும்

8. இருளை நீக்கி அருளை வீச அரிய பார்வை அமர்ந்து
நிற்கும்

மருளை நீக்கி பொருளைக்கட்டா மலர்க்கண்ணதுவும்
பார்த்து நிற்கும்

9. துஷ்ட மிருகம் பேய் கணங்களும் தூயபார்வையில்
தூர ஓடும்

ஜஷ்டம் செய்யும் மனமாம் பேயும கணத்திலொடுங்கி
அடங்கிவிடும்

10. மந்தஹாசப்பார்வை மகிமையுரைக்க எவர்க்கும் ஆகு
மோ தான்

வந்து வந்து பொங்கும் ஆவலால் ஏதோ சிறிதுரைத்
திட்டேனே



ஸ்ரீ வாணீ

விலாஸ் பிரஸ்

ஸ்ரீரங்கம்.

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY, + TANJORE +